**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 24.01.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு, கனடா டல்ஹவுசி பல்கலைக்கழகக் குழுவினர் வருகை

கனடாவின் டல்ஹவுசி பல்கலைக்கழகத்தின் தலைவர் மற்றும் துணைவேந்தர் பேராசிரியர் கிம் ப்ரூக்ஸ் மற்றும் இணைத் துணைவேந்தர் டாக்டர் பிரித்விராஜ் பாலகிருஷ்ணன் ஆகியோர் 30.01.2026 அன்று கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு (TNAU) வருகை தந்தனர்.

கல்விசார் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளை ஆராய்வதும், குறிப்பாக 'இந்தியாவில் கல்வி பயிலுதல்' (Study in India) திட்டத்தின் கீழ் மாணவர் பரிமாற்றத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதும் இந்த வருகையின் நோக்கமாகும்.

மாணவர் நல மையம் சார்பில் பல்கலைக்கழக அதிகாரிகளுடன் உயர்மட்டக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது. மாணவர் நல மையத்தின் முதன்மையர் முனைவர் ஜே.ராமலிங்கம் தூதுக்குழுவினரை வரவேற்றார். ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ரவீந்திரன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.

பல்வேறு புல முதல்வர்கள் மற்றும் துறைத் தலைவர்களுடன் கலந்துரையாடல் அமர்வு நடைபெற்றது. இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு ஆராய்ச்சி வாய்ப்புகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து விளக்கப்பட்டது. கூட்டு ஆராய்ச்சி முயற்சிகள் மற்றும் எதிர்கால ஒத்துழைப்பு குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தைத் தொடர்ந்து, குழுவினர் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்திற்குச் சென்று, அங்கு வேளாண் ஸ்டார்ட்–அப்கள் மற்றும் தொழில்நுட்ப வணிகமயமாக்கல் பணிகளைப் பார்வையிட்டனர். பின்னர், பயிர் நோயியல் துறைக்குச் சென்று அங்கு நடைபெற்று வரும் ஆராய்ச்சிப் பணிகளை கேட்டறிந்தனர்.

இந்த வருகையானது இரு கல்வி நிறுவனங்களுக்கிடையேயான சர்வதேச கல்விப் பங்களிப்பை வலுப்படுத்துவதற்கும், உலகளாவிய ரீதியில் தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது. இதற்கான ஏற்பாடுகளை சர்வதேச படிப்புகளுக்கான ஒருங்கிணைப்பாளர் முனைவர் கே.எம்.செல்லமுத்து மற்றும் மாணவர் நல மைய ஆசிரியர்கள் ஒருங்கிணைத்தனர்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***